# மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம்

**தேதி: 06.10.2021**

**மாண்புமிகு நீதியரசர். திரு. என். ஆனந்த் வெங்கடேசஷ் அவர்களது அமர்வு.**

**<u>நீதிப்பேராணை மனு எண்.7326/2021 (WP.No.7326/2021)</u>**

**<u>நீதிப்பேராணை பல்வகை மனு எண்.7834 & 7835/2021 (WMP.7834&7835/2021)</u>**

இராஜேந்திரப்பட்டினம் கிராம ஊராட்சி,
சார்பாக அதன் தலைவர், T.சுரேஷ்,
விருத்தாச்சலம் ஒன்றியம்,
கடலூர் மாவட்டம் - 608703 .... மனுதாரரர்

எதிர்

1. தமிழ்நாடு அரசு,
   சார்பாக அதன் செயலர்,
   ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை,
   புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600009.

2. ஊரக சுகாதாரம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை இயக்குனர்,
   ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை இயக்குனரகம்
   பனகல் மாளிகை, சென்னை - 600015.

3. ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர்
   குண்டு சாலை, பெண்ணையார் சாலை,
   மஞ்சக்குப்பம், கடலூர் - 607001. .... எதிர் மனுதாரர்கள்

வேண்டுகை: இந்திய அரசமைப்புச் சட்டம் உறுப்பு 226-ன் கீழ் 3ஆம் எதிர்மனுதாரர் ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் அவர்கள் பிறப்பித்த உத்தரவு மற்றும் கோப்பு எண் நா.க.எண். A3/241/2021 கையொப்ப தேதி 18/02/2021 மற்றும் சுற்றறிக்கை நாள் 23.02.2021 ஆகியவற்றை விசாரித்து ரத்து செய்ய வேண்டி (CERTIORARIFIED MANADAMUS) மேற்கண்ட 3ஆம் எதிர்மனுதாரர் ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் அவர்களோ அவரது பிரதிநிதிகளோ ஏனைய எதிர்மனுதாரர்களோ ஊராட்சி சட்ட விதிகளின் படி இராஜேந்திரப்பட்டினம் ஊராட்சி, விருத்தாச்சலம் ஒன்றியம், கடலூர் மாவட்டத்தில் கிராமசபைகளை மனுதாரர் விருப்பப்படி எப்பொழுது வேண்டுமானாலும் கூடுவதைத் தடுக்கவோ, தொந்தரவு செய்யவோ அல்லது எந்த வகையிலும் குறுக்கிடவோ கூடாது என உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரருக்காக: திருமதி. D.நாகசைலா

எதிர் மனுதாரர்களுக்காக: திரு. R.சண்முக சுந்தரம்
தலைமை வழக்குரைஞர் (Advocate General)
உதவி
திரு. U.பரணிதரன்
அரசு வழக்குரைஞர்

## உத்தரவு

இந்த நீதிப்பேராணை மனு 3ஆம் எதிர் மனுதாரரின் 18.02.2021 தேதிய நடைமுறைகள் மற்றும் அதனைத் தொடர்ந்து வெளியிட்ட சுற்றறிக்கை தேதி 23.02.2021 அதைச் சார்ந்து வழங்கிய உத்தரவுகளை ரத்து செய்தும், ஊராட்சி சட்ட விதிமுறைகளின் படி ஊராட்சிகள் விரும்பும் வண்ணம் கிராம சபைகளைக் கூட்ட உத்தரவிடக்கோரி இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த நீதிப்பேராணை மனு 22.03.2021 அன்று விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு இவ்வழக்கு குறித்து அரசின் நிலைப்பாட்டை இந்த

நீதிமன்றத்திற்குத் தெரிவிக்குமாறு அரசு வழக்குரைஞருக்கு உத்தரவிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து 06.09.2021 அன்று விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டு, இந்த நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பிட்டது:

> *அன்றைய தினம் அரசு வழக்குரைஞர் ஊரக வளர்ச்சித் துறை இயக்குனரின் 10.08.2021 தேதிய சுற்றறிக்கை மூலம் கொரோனா-19 சூழ்நிலையின் காரணமாக ஊராட்சிகள் கிராம சபையைக் கூட்டக் கூடாது என்று அனைத்து ஊராட்சிகளுக்கும் அனுப்பப்பட்டதன் நகலை இந்த நீதிமன்றத்திற்குப் பகிர்ந்தார். ஆகவே நீதிமன்றம், செப்டம்பர் அல்லது அக்டோபர் 2021- இலாவது கிராமசபையைக் கூட்ட வாய்ப்புள்ளதா என்று அரசிடம் கேட்டுப் பதிலளிக்குமாறு அரசு வழக்குரைஞருக்கு உத்தரவிட்டது.*
>
> *2. 20.09.2021 அன்று உத்தரவுக்காக என்ற தலைப்பில் பட்டியலிடப்பட்டு இருதரப்பு வழக்குரைஞர்களையும் நேரடி விசாரணைக்கு வருமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.*

3. 20.09.2021 அன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மனுதாரர் வழக்குரைஞர் மற்றும் எதிர் மனுதாரர்களுக்காக வாதிட்ட அரசுத் தலைமை வழக்குரைஞர் ஆகியோரின் வாதங்கள் கேட்கப்பட்டது. அரசுத் தலைமை வழக்குரைஞர் வாதத்தின் போது அக்டோபர் 2 கிராம சபைகள் கூட்டப்படும் என்றும் ஊராட்சி சட்ட விதிமுறைகளின் படி ஊராட்சிகள் சுதந்திரமாக கிராம சபைகளைக் கூட்டிக்கொள்ளலாமா என்ற முக்கிய வினாவிற்குப் பதிலளிக்கக் கால அவகாசம் வேண்டுமெனவும் கோரினார். அதனைத் தொடர்ந்து 20.09.2021 அன்று இந்த நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பிட்டது:

> *06.09.2021 அன்று வழங்கியத் தீர்ப்பிற்குப் பிறகு வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.*

*2. எதிர் மனுதாரர்களுக்காக வாதிடும் கற்றறிந்த அரசுத் தலைமை வழக்குரைஞர் திரு. R.சண்முக சுந்தரம் அவர்கள் கொரோனா-19 கட்டுப்பாட்டு நடத்தை விதிகளின் படி அக்டோபர் 2021 முதல் கிராம சபைகள் முறையாக நடத்தப்படும் என்று இந்த நீதிமன்றத்தில் எடுத்துரைத்தார்.*

*3. மனுதாரர் வழக்குரைஞர், மாவட்ட ஆட்சியர் 18.02.2021 அன்று வழங்கிய சர்ச்சைக்குரிய சுற்றறிக்கை பிரிவு 3, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ன் படி கிராம சபைகளைக் கூட்டிக்கொள்ள ஊராட்சிகளுக்கு வழங்கியுள்ள சுதந்திரத்தைத் தட்டிப்பறிப்பதாக உள்ளதென்றும் எதிர் மனுதாரர்கள் வழங்கியுள்ள உத்தரவுகள், சுற்றறிக்கைகள் கிராம சபை குறிப்பிட்ட நாளில் மட்டும் தான் கூட்டப்பட வேண்டும் என்பது போலவும், மாவட்ட ஆட்சியரின் அனுமதியுடன் தான் கூட்டப்பட வேண்டும் என்பது போலவும், மேலும் தமிழ்நாடு கிராம சபை (நடைமுறைகள் மற்றும் நடத்தை விதிகள்) விதி,1998 மற்றும் 19.11.1998 தேதிய அரசாணை G.O (Ms) No.245ன் படி ஊராட்சிகள் கிராம சபையைக் கூட்டும் சுதந்திரத்தை இச்சுற்றறிக்கை மறைமுகமாகத் தட்டிப்பறித்திருக்கிறது என்றும் வாதிட்டார்.*

*4. எதிர் மனுதாரர்களுக்காக வாதிடும் கற்றறிந்த அரசுத் தலைமை வழக்குரைஞர் அவர்கள் மனுதாரரின் வாதம் குறித்து அறிவுரைகள் பெற்று தேவைப்பட்டால் எதிர்மனு தாக்கல் செய்வதாகவும் அவரது கோரிக்கையை நிறைவேற்றுவது குறித்து கருத்தில் கொள்ளப்பட்டு அடுத்த விசாரணைத் தேதியில் அறிவிப்பதாகவும் கூறினார்.*

*5. உத்தரவுக்காக என்ற தலைப்பில் இருந்த இவ்வழக்கு 06.10.2021 அன்று ஒத்திவைக்கப்பட்டது.*

4. இந்த வழக்கு இன்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது கற்றறிந்த அரசுத் தலைமை வழக்குரைஞர் அவர்கள் 02.10.2021 அன்று கிராம சபைக் கூட்டங்கள் அத்தனைப் பஞ்சாயத்துக்களிலும் நடத்தப்பட்டதாகக் கூறினார். மேலும் இந்த வழக்கில் மனுதாரர் எழுப்பிய முக்கியக் கேள்விக்கான அவரது எழுத்துப்பூர்வமான பதில் 2ஆம் எதிர் மனுதாரர் சார்பாக இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அது பின்வருமாறு

*பணிந்து சமர்ப்பிக்கப்படுவதாவது, பிரிவு 3 (1), தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ன் படி பதிவுபெற்ற வாக்காளர்களைக் கொண்டு அந்த ஊராட்சிக்கு உட்பட்டு கிராம சபை கூட்டப்பட வேண்டும்.*

*அரசின் பொது உத்தரவின் அடிப்படையில் கிராம சபை குறைந்தது ஆண்டுக்கு இரண்டு முறையாவது கூட்டப்பட வேண்டும். ஆனால் இரண்டு கிராம சபைக் கூட்டங்களுக்கு இடையிலான இடைவெளி ஆறு மாதகாலத்தைத் தாண்டக்கூடாது.*

*தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 3 (2-A)-ன் படி கிராம சபைக் கூட்டமானது ஊராட்சித் தலைவரால் கூட்டப்பட வேண்டும். ஒருவேளை அவரால் கிராம சபை கூட்டப்படாவிட்டால் ஊராட்சி ஆய்வாளார் (INSPECTOR OF PANCHAYAT) கூட்டுவார்.*

*அரசாணை எண். G.O (Ms) No.150, ஊரக வளர்ச்சித் (C1) துறை தேதி: 17.07.1998-ன் படி 7 தினங்களுக்கு முன்னதாக முறையாக அறிவித்து கிராம சபை கூட்டப்பட வேண்டும்.*

*அரசாணை எண் G.O (Ms) No.245, ஊரக வளர்ச்சித் (C1) துறை, தேதி: 19.11.1998-ன் படி குறைந்தபட்சம் ஆண்டுக்கு 4 முறை (உம்) ஆண்டு நாட்காட்டியின் படி ஜனவரி 26, மே 1, ஆகஸ்ட் 15, அக்டோபர் 2 ஆகிய தேதிகளில் கட்டாயம்*

*கிராம சபை கூட்டப்பட வேண்டும். தவிர, தேவை ஏற்படின் பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல், குறிப்பிட்ட திட்டங்கள் பற்றிய தகவல், கல்வி மற்றும் செய்தியைக் கொண்டு சேர்த்தல், சமூகத் தணிக்கை போன்றவைகளுக்காக கிராம சபைகளைக் கூட்டிக் கொள்ளலாம்.*

***பணிந்து சமர்ப்பிக்கப்படுவதாவது, சாதாரண நாட்களில் கிராம சபைகளைக் கூட்ட ஊராட்சித் தலைவர் யாரிடமும் முன்னனுமதி பெறத் தேவையில்லை.*** *ஆனாலும் பெருந்தொற்று காலங்களில் கட்டுப்பாடுகள் உள்ள போது கிராம சபை மட்டுமல்லாமல் மேலும் பல செயல்பாடுகளும் அரசால் தடைசெய்யப்பட்டுள்ளது. கிராம சபை என்பது அடிப்படையில் பெருந்திரளான மக்கள் பங்கெடுக்ககூடிய ஒரு நிகழ்வாக உள்ளது. எனவே அரசு தேவைக்கேற்றாற்போல் மக்கள் திரள் மேலாண்மைக்காக விதிமுறைகளை அறிவித்துக் கூட்டத்தைக் கட்டுப்படுத்தியதன் மூலம் கிராமங்களில் கொரோனா-19 பரவலைத் தடுத்துள்ளது.*

*31.01.2021 தேதிய அரசாணை எண் G.O (Ms) No.84, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (DM IV) துறை, மாநிலத்தில் கொரோனா பெருந்தொற்று பரவல் காரணமாக அறிவிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை பேரிடர் மேலாண்மை சட்டம் 2005-ன் படி 28.02.2021 வரை நீட்டித்தது.*

*பணிந்து சமர்ப்பிக்கப்படுவதாவது பத்தி II (vii)-இல் குறிப்பிட்டுள்ள அரசாணை தெரிவிப்பதாவது*

*'மதக் கூட்டங்கள், சமூக / அரசியல் / பொழுதுபோக்கு / விளையாட்டு / கலாச்சார / கல்வி மற்றும் ஏனைய நிகழ்வுகள் 01.02.2021 முதல் அதிகபட்சம் 600 பேர் கூடுமளவுள்ள மூடிய அரங்குகளில் 50 சதவிகித நபர்களுடனும், திறந்தவெளி அரங்குகளில் அதன் மொத்த கொள்திறனில் 50 சதவிகித நபர்களுடனும் சமூக*

*இடைவெளிக் கட்டுப்பாட்டைப் பின்பற்றிக் கூட்டம் நடத்திக்கொள்ளலாம். மேலும் சென்னை நகரத்தில் கூட்டம் கூட்ட காவல் ஆணையரிடமும் மற்ற மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் முன் அனுமதி பெற்று கூட்டம் நடத்திக்கொள்ளலாம்'.*

*இந்நிலையில் இராஜேந்திரப்பட்டினம் ஊராட்சித் தலைவர், கடலூர் மாவட்ட ஆட்சியருக்குக் கிராம சபை கூட்டுவது தொடர்பாகக் கோரிக்கை அனுப்பி, அது மாவட்ட ஆட்சியர் அவர்களால் பொதுமக்களின் நலன் கருதியும், கொரோனா பெருந்தொற்று மாநில அளவில் பரவும் சூழல் மற்றும் மாவட்ட அளவில் கட்டுப்படுத்த எண்ணியும் அக்கோரிக்கையை நிராகரித்துக் கடிதம் தந்துள்ளார். இந்நிலையில் இங்கு சமர்ப்பிப்பதாவது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவரே மாவட்ட பேரிடர் மேலாண்மைப் பொறுப்பாளர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர் போன்ற பொறுப்புகளை ஏற்றவர் ஆவார். அரசாணை எண் G.O (Ms) No.84, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (DM IV) துறை, தேதி: 31.01.2021-ன் படி கொரோனா பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தப் பெருந்திரளாக மக்கள் கூடுவதை மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதியுடன் செயல்படுத்த வரையறுக்கப்பட்டிருந்தது. அதன்படி மதிப்புமிக்க உயர் நீதிமன்றத்தில் பணிந்து சமர்ப்பிக்கப்படுவதாவது, 24.02.2021 இல் நடக்க இருந்த கிராம சபையைக் கொரோனா பெருந்தோற்று பரவக் கூடாது என்கிற நல்லெண்ணத்துடனேயே மாவட்ட ஆட்சியர் அதை அனுமதிக்கவில்லை.*

*பாதுகாப்பானச் சூழலில் கிராம சபைகளைக் கூட்ட வேண்டும் என்பதே ஊராட்சிகளின் ஆய்வாளரின் எண்ணமாக இருக்கிறது. எனவே, இந்த நீதிப்பேராணை நிலைக்கத்தக்கதல்ல. கிராம ஊராட்சி தலைவர்களுக்கு*

*அரசமைப்புச் சட்டம் உறுதிசெய்துள்ள கிராம சபையினைக் கூட்ட உள்ள அதிகாரத்திற்குத் தடை ஏற்படுத்த வேண்டும் என்கிற நோக்கம் அரசுக்கும், ஊராட்சிகளின் ஆய்வாளருக்கும் இல்லை.*

***சாதாரண காலங்களில் கிராம ஊராட்சித் தலைவர் தன்னிச்சையாக அரசின் அல்லது ஊராட்சிகளின் ஆய்வாளரின் முன் அனுமதியின்றி கிராம சபைக் கூட்டங்களைக் கூட்டலாம். அத்தகையச் சூழல்களில், கூட்டம் கூட்டப்படும் நாளுக்கு 7 நாட்களுக்கு முன்பாக விவாதப் பொருட்களை மற்றும் அறிவிப்பு நகலினை ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அனுப்புதல் வேண்டும்.***

5. 3வது எதிர் மனுதாரர் சர்ச்சைக்குரிய சுற்றறிக்கையினை வெளியிட்டது பெருந்தொற்றைக் கருத்தில் கொண்டுதான் என எதிர் மனுதாரர்களுக்காக வாதிடும் கற்றறிந்த அரசுத் தலைமை வழக்குரைஞர் பணிந்து சமர்ப்பித்தார். ஜனவரி 26, மே 1, ஆகஸ்ட் 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய 4 குறிப்பிட்டத் தேதிகளில் கிராம சபை கூட்டப்பட வேண்டும் என்கிற கடிதமானது கிராம சபைக் கூட்டங்கள் ஆண்டுக்கு 4 முறை மட்டுமே கூட்டப்படவேண்டும் என்கிற பொருள்தக்கதல்ல என சமர்ப்பிக்கப்பட்டது. கட்டாயமாகக் குறைந்தபட்சம் ஆண்டுக்கு 4 முறையாவது கடிதத்தில் குறிப்பிட்ட நாள்காட்டி ஆண்டின் அந்த 4 நாட்களில் கிராமசபை கூட்டப்பட வேண்டும் என தாக்கல் செய்யப்பட்டது. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 3 (ii) கிராம சபை ஆண்டுக்கு இரண்டு முறையாவது கூட்டப்படுவதைக் கட்டாயமாக்கியுள்ளது எனத் தாக்கல் செய்யப்பட்டது. எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட கடிதத்தின் படி எதிர் மனுதாரர்கள் குறைந்தபட்சம் ஆண்டுக்கு 4 முறையாவது கிராம சபை கூட்டப்படுவதை வலியுறுத்துகின்றனர். **கிராமசபைகளை நடத்துவதில் எந்த தடையும் விதிக்க முடியாது என்றும், சம்பந்தப்பட்ட ஊராட்சிக்குத் தேவைப்படும் போது எத்தனை முறை வேண்டுமானாலும் கூட்டலாம் என்றும் கற்றறிந்த அரசுத் தலைமை வழக்குரைஞர் திட்டவட்டமான நிலைபாட்டினைச் சமர்ப்பித்தார்**.

6. இறுதியாக தனது வாதத்தை நிறைவு செய்த தலைமை வழக்குரைஞர் அவர்கள் **கிராம சபையைக் கூட்ட ஊராட்சி தலைவர்களுக்குச் சட்டப்படி எந்தத் தடையும் இல்லை. எப்பொழுது வேண்டுமானாலும் கூட்டலாம். அரசிடமோ, ஊராட்சிகளின் ஆய்வாளர் அவர்களிடமோ முன்னனுமதி வாங்கத் தேவையில்லை. ஆனால் கிராம சபையின் அறிவிப்பு மற்றும் விவாதப் பொருட்களை 7 முழு நாட்களுக்கு முன்னதாக ஊராட்சிகளின் ஆய்வாளர் அவர்களுக்குத் தெரிவித்துவிட்டு எத்தனை முறை வேண்டுமானாலும் கூட்டிக் கொள்ளலாம்** என்பதுதான் அவரது வாதத்தின் நிறைவாக இருந்தது.

7. **எதிர் மனுதாரர்களுக்காகத் தனது வாதத்தை எடுத்துரைத்த தலைமை வழக்குரைஞர் அவர்களது கூற்றுப் பிரகாரம் இந்த நீதிமன்றம் மனுதாரரின் குறைகளுக்கு, கோரிக்கைகளுக்குப் பதிலாக அமைந்தது என்று கருதுகிறது. சர்ச்சைக்குரிய சுற்றறிக்கை பெருந்தொற்றுக் காரணமாக மக்கள் நலன் கருதி வழங்கப்பட்டதே அன்றி அது சட்டப்படியாக ஊராட்சித் தலைவர்களுக்குக் கிராம சபையை எத்தனை முறை வேண்டுமானாலும் கூட்டிக் கொள்ளலாம் என்கிற உரிமையைத் தடை செய்யும் நோக்கத்தில் அல்ல. ஆனால் அது சாதாரண காலங்களில் மட்டுமே பெருந்தொற்று காலங்களில் அல்ல என்ற நிலைப்பாடு உறுதி செய்யப்படுகிறது. 18.02.2021 தேதிய சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு 4 முறை கண்டிப்பாகக் கிராமசபையைக் கூட்ட வேண்டும் என்பது தவிர (குறைந்தபட்சம்) அதற்கு அதிகமாகக் கூட்டக் கூடாது என்கிற நோக்கத்தில் அனுப்பப்பட்டது அல்ல.**

8. மேற்கண்டவைகளின் அடிப்படையில் இந்த நீதிப்பேராணை மனு முடித்து வைக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை. அதனோடு தொடர்புடைய பல்வகை மனுக்களும் முடித்து வைக்கப்படுகிறது.

**06.10.2021**

1. தமிழ்நாடு அரசு,
   சார்பாக அதன் செயலர்,
   ஊரக வளர்ச்சி & பஞ்சாயத்து ராஜ் துறை,
   புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600009.

2. ஊரக சுகாதாரம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை இயக்குனர்,
   ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை இயக்குனரகம்
   பனகல் மாளிகை, சென்னை - 600015.

3. ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர்
   குண்டு சாலை, பெண்ணையார் சாலை,
   மஞ்சக்குப்பம், கடலூர் - 607001.

**நீதியரசர் N. ஆனந்த் வெங்கடேஷ்,**

**நீதிப்பேராணை எண்.7326 / 2021**
**மற்றும் WPMP Nos.7834 & 7835 /2021**

**06.10.2021**

**தமிழாக்க உதவி:**

திரு. M. குரு சரவணன், உள்ளாட்சி செயற்பாட்டாளர்,

திரு. N.D. சிவக்குமரன், உயர்நீதிமன்ற வழக்குரைஞர்,

திரு. M. நீலமணிகண்டன், உள்ளாட்சி செயற்பாட்டாளர்.

* இந்த மொழிபெயர்ப்பு வழக்குரைஞர்கள் உதவியுடன் நீதிமன்றத் தீர்ப்பின் மூலப்பிரதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எளிமைப்படுத்தப்பட்டத் தமிழாக்கம் ஆகும். சரியான புரிதலுக்குத் தீர்ப்பின் ஆங்கிலப் பிரதியினை சரிப்பார்த்துக் கொள்ளவும். **Click link to download order copy: https://bit.ly/31F4XYw**